Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No.51 /2022
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –11

| | | | |
|---|---|---|---|
| Name: | சத்தியபாக்கிலட்சுமி | Calling: | உதவி மருத்துவர் |
| Husband's Name: | ராஜன் | Religion: | |
| Village: | வாணியம்பாடி | Age: | 48 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.02.2026 நேரம் : 12.45 PM

( எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

அ.சா.11 முதன்மை விசாரணை

நான்தற்போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் குடிமுறை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.06.2021 ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் நான் முழுநேர பணியில் இருந்த போது காலை 09.40 மணியளவில் எழிலரசன் வயது –27 த/பெ மூரத்தி என்பவரை சாலை விபத்து காரணமாக அரசு மருத்துவமனைக்கு அவரை அவரது தகப்பனார் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு சுவாசகாற்று இல்லை, இதய துடிப்பு இல்லை, இரத்த அழுத்தம் இல்லை, அவரது வலது காது அறுந்து தொங்கிய நிலையில் இருந்தது. காதின் உள் எலும்பு வெளியில் தெரிந்தது. கீழ் தாடை எலும்பு உடைந்து காணப்பட்டது. மண்டை ஓட்டின் கொடுங்காயம் 10 செ.மீ அளவில் காணப்பட்டது. அவருக்கு ECG எடுத்து பார்க்கும் போது அவர் உயிருடன் இல்லை என்பது தெரியவந்தது. அதனால் அவரது உடலை உடற்கூறாய்வு செய்வதற்காக பிணவறையில் வைக்கப்பட்டது.

அவரது உடலை பிணவறையில் வைத்து 27.06.2021 மாலை 03.00 மணியளவில் உடற்கூறாய்வு தொடங்கி மாலை 04.00 மணிவரை உடற்கூறாய்வு செய்தேன். உடற்கூறாய்வு செய்ததில் அவருக்கு தலையில் பலமான காயம் ஏற்பட்டு இரத்தபோக்கு ஏற்பட்டு இருந்தது. அவர் இறந்தற்கான காரணம் தலையில் ஏற்பட்ட அதிகமான இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சினால் இறப்பு ஏற்பட்டிருக்கும் என்று உடற்கூறாய்வு அறிக்கை வழங்கினேன். **நான் வழங்கிய உடற்கூறாய்வு அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வேகமாக செல்லும் போது எதிரில் உள்ள இரும்பு கம்பத்தில் மோதி கீழே விழுந்தால் கூட நான் மேற்சொன்னகாயங்கள் எற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சத்தியபாக்கிலட்சுமி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.24 14:40:11 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No.51 /2022
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –12

| | | | |
|---|---|---|---|
| Name: | மணி | Calling: | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Father's Name: | அமிர்தலிங்கம் | Religion: | |
| Village: | பேராம்பட்டு | Age: | 62 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.02.2026 நேரம் : 01.10 PM

( எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

அ.சா.12 முதன்மை விசாரணை

நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கட்டுபாட்டு அலுவலகத்தில் உதவி ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 27.06.2021 ம் தேதி வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை சுமார் 10.00 மணிக்கு சுகாஷினி என்பவர் நிலையம் சேர்ந்து எழுத்து மூலமாக கொடுத்த புகாரை பெற்று வாணியம்பாடி நகர நிலைய குற்ற எண். 430/2021 சட்டப்பிரிவுகள் 279,304(A) IPC படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து காவல் ஆய்வாளரின் புலன் விசாரணைக்கு வைத்துக்கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

புகார் கொடுக்க வந்த சுகாஷினி என்பவர் சம்பவயிடம் சென்று வந்தாரா என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் புகார் வாக்குமூலத்தில் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளார், சம்பவயிடத்திற்கு சென்றதாக கூறவில்லை. புகார்தாருக்கு வழக்கு சம்மந்தமாக நேரடியாக தெரியாது என்றாலும் அவரது சகோதரர் சொல்லிதான் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்ற விவரம் புகார் தாரருக்கு தெரியாது என்றால் தெரியும். முதல் தகவல் அறிக்கை தயாரிக்கும் போது சம்பவயிடத்திற்கு சென்று பார்வையிட்டேனா என்றால் இல்லை. புகார்தாருக்கு சம்பவம் குறித்து தெரியாது என்றாலும் அவர் கொடுத்து புகாரினை பெற்று தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மணி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.24 14:40:17 +0530